


**23. 08. 2025**

**தலைப்பு செய்திகள்**

**1.** நம் நாட்டின் விண்வெளி ஆய்வு நிலையம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்தார்.

**2.** விண்வெளி துறையில் தனியாருக்கு அனுமதி வழங்கியதே மத்திய அரசின் இன்றியமையா சீர்திருத்தம் என்று மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திராசிங் கூறியுள்ளார்.

**3.** தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

**4.** தமிழ்நாட்டில் நகர்புறங்களுக்கு இணையாக கிராமப்புறங்களும் வளர்ச்சி பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மாநில அமைச்சர் திரு.முத்துசாமி கூறியுள்ளார்.

**5.** உலக ஜுனியர் வில்வித்தை சேம்பியன் பட்டத்தை இந்திய ஆடவர் குழு கைப்பற்றியுள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

************

**தேசிய விண்வெளி தினம்**

நம் நாட்டின் விண்வெளி ஆய்வு நிலையம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2ஆவது தேசிய விண்வெளி தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் விடுத்துள்ள காணொலி செய்தியில் விரைவில் இத்தினம் இளைஞர்களை கவரும் கொண்டாட்ட தினமாக உருவெடுக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ககன்யான் விண்வெளி திட்டம் விரைவில் தொடங்கப்படும் என்று கூறியுள்ள அவர் அதி நவீன தொழில்நுட்பங்களான மின்விசை உந்து சக்தி, செமி கிரையோஜனிக் எஞ்சின் விண்வெளி திட்டங்களில் இந்தியா சாதனை படைக்கும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளில் விண்வெளி துறையில் பல்வேறு சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாக சாதனைகள் படைக்கப்படுவதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்தியாவின் ஆளுமையில் விண்வெளி திட்டமும் முக்கிய அங்கம் வகிப்பதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

விவசாயிகளுக்கான பயிர் காப்பீடு முதல், மீனவர்களுக்கான பாதுகாப்பு வழிகாட்டுதல்கள், பேரிடர் மேலாண்மை வரை சாமானிய மக்களின் வாழ்க்கை மறையை மத்திய அரசின் விண்வெளி தொழில்நுட்ப திட்டங்கள், இலகுவாக்குவதாக கூறினார்.

2023ஆம் ஆண்டு இதேநாளில் சந்திரயான் 3 திட்டத்தின் கீழ் நிலவின் தென் துருவத்தில் விக்ரம் லேண்டர் கருவி வெற்றிகரமாக தரையிறங்கியதை தொடர்ந்து இத்தினம் விண்வெளி தினமாக கொண்டாடப்படுகிறது.

ஆரியபட்டா முதல் ககன்யான்வரை “எல்லையற்ற வாய்ப்புகளுக்கான நமது மூதாதையற்களின் அறிவாற்றல்” என்ற கருப்பொருளுடன் நாடுமுழுவதும் இன்று பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

************

**ஜிதேந்திரசிங்**

சந்திரயான் 3-ன் வெற்றியை பறைசாற்றும் வகையில் விண்வெளி தின கொண்டாட்டங்கள் இன்று பெருமிதத்துடன் கொண்டாடப்படுவதாக மத்திய விண்வெளித்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

கடந்த 11 ஆண்டுகளில் விண்வெளி துறையில் தனியார் பங்களிப்புக்கு அனுமதி வழங்கியதே இத்துறையில் மத்திய அரசு கொண்டுவந்த மிகப்பெரிய சீர்திருத்தம் என்று அவர் எடுத்துரைத்தார்.

************

**நாராயணன்**

இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் வெளியிட்ட செய்தியில் இந்தியாவின் விண்வெளி திட்டங்கள் உலக நாடுகளுக்கு முன்னோடியாக நம் தேசத்தை முன்னிறுத்துவதாக பெருமிதம் தெரிவித்துள்ளார்.

************

**பிரதமர் - இயற்கை வேளாண்மை**

பிரதமர் திரு.நரேந்திரமோடி தேசிய இயற்கை வேளாண்மை இயக்கத்தை புதுதில்லியில் இன்று தொடங்கிவைக்கிறார்.

பருவநிலை சவால்களுக்கு எதிரான நீடித்த மகசூல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளும் இந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ளது.

************

**ஜவுளிதுறை**

வளர்ச்சி அடைந்த பாரதம் ஜவுளி துறை தொழில் நுட்பம் தொடர்பான தேசிய உச்சிமாநாடு பீஹார் தலைநகர் பாட்னாவில் இன்று நடைபெற்றது.

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங், இணை அமைச்சர் திரு.பபித்ரா மார்கரேட்டா உள்ளிட்டோர் பங்கேற்ற இம்மாநாட்டில் ஜவுளி துறை கட்டமைப்பை மேம்படுத்தி சுற்றுச்சூழலுக்கு உகந்த நீடித்த புத்தாக்க நடவடிக்கைகளால் விரைவான வளர்ச்சி எட்டுவது குறித்து விவாதிக்கப்பட்டது.

************

**குடியரசு துணை தலைவர் தேர்தல்**

குடியரசு துணை தலைவர் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன், I.N.D.I கூட்டணி வேட்பாளர் திரு.சுதர்சன் ரெட்டி ஆகியோரின் மனுக்கள் ஏற்கப்பட்டதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் அடுத்தமாதம் 9-ம் தேதி நடைபெறும் நிலையில் மனுக்களை விலக்கி கொள்ள நாளை மறுநாள் வரை கால அவகாசம் உள்ளது.

************

**சரக்கு சேவை வரி**

56ஆவது சரக்கு சேவை வரி குழு கூட்டம் **மத்திய** நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுதில்லியில் அடுத்த மாதம் 3ஆம் தேதி தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெற உள்ளது.

தற்போதுள்ள GST ˙வரி விதிப்பு முறையை 5 மற்றும் 18 சதவிகிதம் என இரண்டு விகிதங்களாக குறைப்பது குறித்து இதில் முடிவெடுக்கப்படும்.

செரிவூட்டப்பட்ட அரிசி வகைகளுக்கான வரி விகிதத்தை 5 சதவிகிதமாக குறைப்பது உள்ளிட்டவை குறித்தும் இதில் ஆலோசிக்கப்படுகிறது.

மருத்துவம் மற்றும் ஆயுள் காப்பீடு மீதான வரி விகிதங்களில் மாநில அமைச்சர்களை உள்ளடக்கிய 3 அமைச்சர்கள் குழு அளித்த பரிந்துரை மீதும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது.

************

**முதலமைச்சர்**

தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் அனைத்து தரப்பு மக்களையும் சென்றடைவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற மத்திய மாநில கூட்டமைப்பு குறித்த தேசிய கருத்தரங்கில் உரையாற்றிய அவர் மத்திய அரசுக்கு அதிக வரி வருவாய் ஈட்டி தரும் மாநிலமாக தமிழகம் திகழ்வதாகவும் கூறினார்.

மாநிலத்தின் உரிமைகளை நிலைநாட்ட அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

அரசியலமைப்பு சட்டம் தேசத்தின் வளர்ச்சியில் முதன்மை வகிப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.

தமிழகத்தின் இரு மொழி கொள்கையை கர்நாடகம், மகராஷ்டிரம் உள்ளிட்ட பிற மாநிலங்களும் நடைமுறைபடுத்துவதாக குறிப்பிட்டார்.

************

**முத்துசாமி**

தமிழ்நாட்டில் வீட்டு வசதி துறையில் பல்வேறு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாக மாநில வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு.முத்துசாமி கூறியுள்ளார்.

ஈரோட்டில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் ஒற்றை சாளர முறை, கட்டிட வரைபடத்திற்கு சுய சான்றிதழ் உள்ளிட்ட வீட்டு வசதி துறையில் பல்வேறு சலுகைகளை தமிழக அரசு செயல்படுத்தி வருவதாக கூறினார்.

எதிர்காலத்தில் கிராமப்புறங்களும் நகர்புறங்களாக வளர்ச்சி பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

மக்களின் பாதுகாப்பு கருதி கிராமபுறங்களிலும் வீடு கட்டுமான பணிகளில் விதிகள் பின்பற்றப்படுவது உறுதி செய்யப்படுகிறது என்றார்.

************

**ரகுபதி**

ஏழை எளிய மக்களும் உயர்தர மருத்துவ சிகிச்சை பெற "மக்கள் நலன் காக்கும் சிறப்பு மருத்துவ திட்ட முகாம்" நடைபெறுவதாக மாநில இயற்கை வளங்கள்துறை அமைச்சர் திரு. எஸ். ரகுபதி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் இன்று இம்முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர் தனியார் மருத்துவமனைகளிலும் மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் உயர் சிகிச்சை வழங்கப்படுவதை சுட்டிக்காட்டினார்.

**வாய்ஸ்**

**சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் இன்று** நடைபெற்ற மருத்துவ முகாமை ஆய்வு செய்த மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் இத்தகைய முகாம்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு அட்டை மாற்றுதிறனாளிகளுக்கான மருத்துவ சான்றிதழ் உள்ளிட்டவையும் இம்முகாம்களில் வழங்கப்படுவதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

************

**கீதாஜீவன் புத்த திருவிழா**

தூத்துக்குடியில் நடைபெறும் 6ஆவது புத்தக திருவிழாவில் புகைப்பட கண்காட்சியை மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் இன்று துவக்கிவைத்தார்.

இக்கண்காட்சியில் மீனவர்கள் உப்பள தொழிலாளர்கள் விவசாயிகள் உள்ளிட்ட தூத்துக்குடி மாவட்ட மக்களின் வாழ்க்கை முறையை பிரதிபலிக்கும் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**வேலூர்**

வேலூர் மாவட்டத்தில் கன மழை காரணமாக காட்பாடி அருகே அறுவடைக்கு தயாராக இருந்த 50 ஏக்கருக்கும் மேற்பட்ட நெல் மற்றும் வேர்கடலை பயிர்கள் நீரில் மூழ்கிய நிலையில் உரிய நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

************

**இருவரி**

பெரம்பலூர் மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் அடுத்த மாதம் 16ஆம் தேதிக்குள் விவசாயிகள் பயிர் காப்பீடு செய்து கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.அருண்ராஜ் அறிவுறுத்தியுள்ளார்.

**அரியலூர் மாவட்டத்தில் எரிவாயு நுகர்வோர்** குறைதீர் நாள் கூட்டம் வரும் செவ்வாய்கிழமை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

**புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும்** அனைத்துவகையான மன நல நிறுவனங்களும் தமிழக அரசின் மன நல ஆணையத்தில் பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி அருணா கேட்டுக்கொண்டுள்ளார்.

**தர்மபுரி வனக்கோட்டத்திற்குட்பட்ட கிராமங்களில்** உரிமம் இல்லாமல் நாட்டு துப்பாக்கி வைத்திருப்பவர்கள் வரும் 10ஆம் தேதிக்குள் தாமாக முன்வந்து வனத்துறையிடம் ஒப்படைக்குமாறு மாவட்ட வன அலுவலர் திரு.ராஜாங்கம் தெரிவித்துள்ளார்.

**நீலகிரி மாவட்டம் குன்னூர் மலைபாதையில்** ஒற்றை யானை நாட்டமாட்டம் காணப்படுவதால் வாகன ஓட்டிகள் மற்றும் சுற்றுலா பயணிகள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பலாப்பழ சீசன் தொடங்கியுள்ள நிலையில் சம வெளியிலிருந்து காட்டு யானைகள் சாலைகளை கடப்பதால் பாதுகாப்பு கருதி புகைப்படம் எடுப்பதை தவிர்க்க வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

************

**வில்வித்தை**

கனடாவில் நடைபெற்ற 21 வயதிற்குட்பட்ட உலக ஜூனியர் வில்வித்தை போட்டியின் சேம்பியன் பட்டத்தை இந்திய ஆடவர் குழு கைப்பற்றியுள்ளது.

இப்பிரிவில் குஷால், மிஹிர், கணேஷ் ஆகியோர் கொண்ட குழு – ஜெர்மனி அணியை வென்றது.

இதேபோல் 18 வயதிற்குட்பட்டோர் பிரிவில் மோஹித், யோகேஷ், தேவன்ச் ஆகியோர் கொண்ட குழு - அமெரிக்காவை தோற்கடித்து தங்க பதக்கத்தை கைப்பற்றியது.

************

**துப்பாக்கி சுடும்**

கஜகஸ்தானில் நடைபெறும் 16ஆவது ஆசிய துப்பாக்கி சுடும் சேம்பியன் பட்ட போட்டியில் 10 மீட்டர் ஏர் ரை.்.பில் கலப்பு இரட்டையர் பிரிவில் அர்ஜுன் பபுத்தா, இளைவேனில் வாளறிவன் இணை தங்க பதக்கம் வென்றது.

சீன இணையை 17-11 என்ற புள்ளிகள் கணக்கில் தோற்கடித்து இந்திய அணி சேம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**